**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 36/2017 மற்றும் 13/2022<br>கூட்டு விசாரணை வழக்கு | பி.வா.சா. | : 1 |
| பெயர் | : ராஜா | த/பெ. | : முத்து |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : பொய்யாம்பட்டி |
| தேதி | : 16.02.2024 | வயது | : 50 /2024 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் – 02.40 P.M. – 02.52 P.M.

**அசல் வழக்கு 36/2017 ன் பிரதிவாதிகள் மற்றும் 13/2022 வழக்கின் வாதிகள் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி:**

2) நான் ஏற்கனவே எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்து பி .வா.சா.1 முதல் பி .வா.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்களை குறியீடு செய்துள்ளேன் . தற்போது எனது தரப்பு கூடுதல் சான்றாவணங்களை தாக்கல் செய்கிறேன் . அவற்றை பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

பி.வா.சா.ஆ.14 – 12.07.1985 தேதியிட்ட கிராம தான பதிவு ஆவணம் – இணைய நகல் (ஆவண எண்.756/1985)

பி.வா.சா.ஆ.15 – ராஜா என்பவர் பெயரிலுள்ள மின் கட்டண இரசீதுகள் – அசல் ( 7 எண்ணிக்கை)

பி.வா.சா.ஆ.16 – நத்தம் காவல் நிலைய குற்ற எண் .414/18 ல் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை – இணையநகல்.

பி.வா.சா.ஆ.17 – 22.12.2022 தேதியிட்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் WP(MD)No.28252 of 2022 என்ற

மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு – சான்றிட்ட நகல்.

பி.வா.சா.ஆ.18 – நத்தம் காவல் நிலைய குற்ற எண் .26/2023 ல் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை – இணையநகல்.

(பி.வா.சா.ஆ.14 ஆவணம் வழக்கிற்கு தொடர்பில்லாதது என்றும் வழக்கில் சொல்லப்படாத ஆவணமென்று குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு, ஆட்சேபணையுடன் மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்பட்டது.)

மேற்கண்ட ஆவணங்களை பி.வா.சா.ஆ.14 முதல் பி.வா.சா.ஆ.18 வரை குறியீடு செய்யப்படுகிறது . மேற்கண்ட எனது சாட்சி மற்றும் சான்றவணங்களை ஏற்றுக்கொண்டு அ .வ.எண்.36/2017 வழக்கை தள்ளுபடி செய்தும் அ.வ.எண்.13/2022 வழக்கை நாங்கள் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

வாதிகள் தரப்பு குறுக்குவிசாரணைக்காக வழக்கு வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 16.02.2024 கையெழுத்து செய்துள்ளார்.

V UDAYA SURIYA — Digitally signed by V UDAYA SURIYA Date: 2024.02.16 21:11:26 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்